செய்தி வெளியீடு எண்: 596 நாள் : 07.11.2013

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு B V ரமணா அவர்களால் 07–11–2013 அன்று காலை 10.30 மணியளவில் வணிகவரித்துறை அதிகம் வரி செலுத்துவோர் பிரிவின் (Large Tax Payer Unit) பணித்திறனாய்வு மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி எண்.110-ன் கீழ் செய்த அறிக்கையில் பதிவுத்துறையின் நிர்வாகம் சீர்செய்தல், தணிக்கை, சீட்டு, சங்கம் மற்றும் திருமணப்பதிவு தொடர்பான பணிகள் செம்மைபடுத்துதல் ஆகியவற்றின் மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், வணிகவரி புதிய பதிவுச்சான்று வழங்கும் முறையினை சீரமைப்பு சம்மந்தமாக ஆலோசனை செய்யப்பட்டது. ஆய்வின்போது அரசு முதன்மைச் செயலளர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ,ஆ.ப., வணிகவரி ஆணையர் திரு.மரு.க.மணிவாசன், இ.ஆ.ப., திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., இணை ஆணையர் திரு.T.ஆப்ரஹாம், இ.ஆ.ப., கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள், வணிகவரி கூடுதல் ஆணையர்கள் மற்றும் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முன்னதாக, பதிவுத்துறையில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புதல் குறித்து ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கைகளை விரைவுபடுத்த அறிவுரை வழங்கினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்பிரிவின் வணிகவரி வருவாயானது, இவ்வாண்டு அக்டோபர் மாதம் வரை ரூ.15086 கோடி வசூலித்து சென்ற ஆண்டைவிட ரூ.343 கோடி மட்டும் அதிகபடியாக வசூலிக்கப்பட்டு வளர்ச்சி அடைந்துள்ளது என தெரிவித்தார்கள். இப்பிரிவில் நிலுவையாய் உள்ள 83 டி3 பிரேரணைகளும், 137 தணிக்கை பிரேரணைகளும் மற்றும் நிலுவையாய் உள்ள மத்திய வரிவிதிப்புகளையும் விரைந்து முடித்திட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் சமூக நலத் திட்டங்களுக்கும், இம்மாநிலத்தின் வளர்ச்சித்திட்டங்களுக்கும் தேவையான நிதியில் வணிகவரி வருவாயின் வளர்ச்சி முக்கிய காரணியாக விளங்குவதால் வணிகவரித்துறை அலுவலர்கள் தமது பணிகளில் தீவிர கவனம் செலுத்தி வரிவருவாயை பெருக்க முழு முயற்சி மேற்கொண்டு இவ்வருட குறியீட்டினை அடைய வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

...2...

இப்பணிகளுள் வணிகர்களின் மாதாந்திர நமூனாக்களை கூர்ந்தாய்வு செய்தல், நமூனா பெறுதல், பெறப்பட்டாத நமூனாவின் மீதான உரிய நடவடிக்கை, நிலுவையில் உள்ள மத்திய விற்பனை வரிச்சட்ட வரிவிதிப்பு மற்றும் நிலுவையில் உள்ள செயலாக்கப்பிரிவின் முன் மொழிவுகளை விரைந்து செயல்படுத்துதல் ஆகியவற்றில் அனைத்து வரிவிதிப்பு அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும், வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்கள் மற்றும் வாகன சோதனையில் கண்டறியப்படும் வரி ஏய்ப்பு இனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

மேலும், எதிர்மறை வளர்ச்சி மற்றும் குறைவான வளர்ச்சி அறியப்படும் வணிக இனங்களிலும், அதிக உள்ளீட்டு வரியினை கோரியுள்ள மற்றும் முன்கொணர்ந்த இனங்களிலும் கூர்ந்தாய்வு செய்து காரணங்களை கண்டறிந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள். இப்பிரிவின் இணை ஆணையர், துணை ஆணையர்களும் வரி நிலுவைகளை வசூலிக்கவும், மாதாந்திர நமூனாக்களை விடுதலின்றி வசூலிக்கவும், வரி வழக்குகளில் துரித நடவடிக்கை மேற்கொண்டு நிலுவையிலுள்ள வரி வருவாயை வசூலிக்கவும் அறிவுரை வழங்கியுள்ளார்கள். அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவாய் இலக்கினை அடைய வேண்டும் என கேட்டுக்கொண்டு ஆய்வினை நிறைவு செய்தார்கள்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9